Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Flower Medicine in Kapilar's *Kurinjippattu*

**Dr. I. Sathyaseela**, Assistant Professor of Tamil,
N.M.S.S.V.N. College, Madurai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-7544-5897**
**DOI: 10.5281/zenodo.6619543**

## Abstract

*The life of Tamils is in harmony with nature. Just as there are many feelings of pride on the soil of Tamilnadu the language he speaks, there are many feelings of pride in the environment in which he lives. Among them, he lives with food, clothing, and shelter as the central theme of nature. Nature is still playing a major role in a happy and healthy life. Nature has gifted many products for a healthy life. Important among them are flowers. Tamil people are aware of the greatness of the flowers. The Sangam poet Kapilar points out 99 types of flowers in the "Kurinjippattu". All flowers are having medicinal qualities. The purpose of this article is to examine the medicinal properties of some of the most popular flowers found in Kapilar's "Kurinjippattu'.*

**Keywords:** Flower, Medicine, Kapilar, *Kurinjippattu.*

## References

[1] *Kurinjippattu*. Kazhaga Veliutu, Saiva Siddhanta Nurupathippuk Kazhagam, Tirunelveli.
[2] A. Pasumalayarasu. *Senthamizhum Siddha Maruthuvamum*, Kavya Publishing.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# கபிலரின் குறிஞ்சிப்பாட்டில் இடம்பெறும் மலர்களின் மருத்துவம்

**முனைவர் இ.சத்தியசீலா**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நா.ம.ச.ச.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-7544-5897
DOI: 10.5281/zenodo.6619543

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழர்களின் வாழ்க்கையானது இயற்கையோடு இயைந்த ஒன்றாகும். தமிழனின் மண்ணிற்கும் அவன் பேசும் மொழிக்கும் பல பெருமைகள் இருப்பதைப் போல அவன் வாழிடச் சூழலுக்கும் பல பெருமைகள் உண்டு. அவற்றுள் உணவு உடை உறைவிடம் போன்றவற்றை அவன் இயற்கையை மையக் களமாக வைத்து அமைத்துக் கொண்டேதான் வாழ்ந்து வருகிறான். அவனது மகிழ்ச்சியான ஆரோக்கியமான வாழ்விற்கு இயற்கை இன்றளவும் பெரும் பங்காற்றி வருகின்றது. ஆரோக்கியமான வாழ்விற்கு இயற்கை அவனுக்குப் பல பொருட்களைக் கொடையாக நல்கியுள்ளது. அவற்றுள் முக்கியமானதாக இடம் பெறுவனவற்றுள் பூக்களும் அடங்கும். பூக்களின் பெருமையினை நன்கு உணர்ந்த சங்கப் புலவராகிய கபிலர் தாமியற்றிய குறிஞ்சிப்பாட்டில் 99 வகை மலர்களைச் சுட்டிச் செல்கிறார். எல்லா மலர்களும் மருத்துவ குணம் கொண்டவையாகும். அம்மலர்களுள் சில மலர்களின் மருத்துவ குணங்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**திறவுச்சொற்கள்:** கபிலர், *குறிஞ்சிப்பாட்டு*, மலர்கள், மருத்துவ குணம்.

தமிழர்களின் வாழ்க்கையானது இயற்கையோடு இயைந்த ஒன்றாகும். தமிழனின் மண்ணிற்கும் அவன் பேசும் மொழிக்கும் பல பெருமைகள் இருப்பதைப் போல அவன் வாழிடச் சூழலுக்கும் பல பெருமைகள் உண்டு. அவற்றுள் உணவு உடை உறைவிடம் போன்றவற்றை அவன் இயற்கையை மையக் களமாக வைத்து அமைத்துக் கொண்டேதான் வாழ்ந்து வருகிறான். அவனது மகிழ்ச்சியான ஆரோக்கியமான வாழ்விற்கு இயற்கை இன்றளவும் பெரும் பங்காற்றி வருகின்றது. ஆரோக்கியமான வாழ்விற்கு இயற்கை அவனுக்குப் பல பொருட்களைக் கொடையாக நல்கியுள்ளது. அவற்றுள் முக்கியமானதாக இடம் பெறுவனவற்றுள் பூக்களும் அடங்கும். பூக்களின் பெருமையினை நன்கு உணர்ந்த சங்கப் புலவராகிய கபிலர் தாமியற்றிய குறிஞ்சிப்பாட்டில் 99 வகை மலர்களைச் சுட்டிச் செல்கிறார். எல்லா மலர்களும் மருத்துவ குணம் கொண்டவையாகும். அம்மலர்களுள் சில மலர்களின் மருத்துவ குணங்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாய்விற்கு முதன்மை ஆதாரமாக கபிலரின் குறிஞ்சிப்பாட்டும் துணைமை ஆதாரமாக சித்தர்களின் இலக்கியங்களும் அதை சார்ந்த கட்டுரைகளும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. பக்க வரையறையின் காரணமாக 99 வகை மலர்களுள் சில மலர்களின் மருத்துவக் குணங்களே விளக்கப்படுகிறது.

**பழந்தமிழனின் மருத்துவம்**

ஆரோக்கியமாக வாழவேண்டுமெனில் **'அற்றது போற்றி உண்'** என வள்ளுவப் பெருந்தகை தனது திருக்குறளில் மருந்து என்னும் அதிகாரம் வழி கூறிச் செல்கிறார். திருமூலரும் 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்று ஆரோக்கியமாக வாழவேண்டுமெனில் உணவுதான் மருந்து

என்கிறார். இவ்வாறு இரு பெரும் ஞானிகளும் உணவு தான் மருந்தே என்ற தம் வாக்காக எடுத்தியம்பியுள்ளனர். அது மட்டுமல்லாமல் ஆரோக்கியமான உடல் இருந்தால்தான் ஆரோக்கியமான சமுதாயம் உருவாகும் என்பதுவும் அவர்களது கோட்பாடுகள் ஆகும். தமிழர்களின் இயற்கை மருத்துவ முறையானது மேனாட்டாரின் வருகையின் காரணமாக முற்றிலும் வழக்கொழிந்து போய்விட்டது. இலை பூ காய் வேர் பட்டை என அனைத்தையும் மருந்தாகக் கொண்ட தமிழன் வேதிப் பொருட்களின் ஆதிக்கப் பிடியினுள் வீழ்ந்து புதிய புதிய நோயினை அவனாகவே வாங்கிக் கொண்டு மீளமுடியாமல் திகைக்கின்றான். தமிழனின் சித்த மருத்துவத்தில் மலர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும்.

**சங்குப்பூ**

சங்குபுஷ்பம் பூவைக் கபிலர் கருவிளம் என்று கூறுகிறார். இதன் தாவரவியல் பெயர் **Clitoria ternatea** என்பதாகும்.

**"முறிந்துபோம் தூவாலையிட வீக்கம் போகும்**
**முறையான நீர்முள்ளி சங்கங்குப்பி**
**யறிந்துபோம் கருநொச்சி புண்ணாக்கு மூலம்**
**அப்பனே அமுக்குரா சாறுங் கூட்டி**
**பறிந்துபோம் குக்குடத்தி னவரைச் சாறும்**
**பண்பான வகையொன்று படிகாலாக**
**நெறிந்துபோம் அடுப்பிலேற்றி வற்றக் காய்ச்சி**
**நேராய்ப் பூசிடவே வாங்கிப்போமே" (தேரையர்)**

கை, கால்களில் நரம்புகள் முறிந்து வீக்கம் ஏற்பட்டால் அதற்கு நீர்முள்ளி, சங்குகுப்பி, கருநொச்சி, புண்ணாக்குமூலம், அமுக்குராசாறு, குக்குடத்தி அவரைச்சாறு, இவைகளை சமஅளவு எடுத்து கால் பகுதி ஆகும் வரைக்கும் அடுப்பிலேற்றி வற்றக் காய்ச்சி வீக்கமுள்ள இடத்தில் நேராகத் தடவினால் நரம்பு முறிவினால் ஏற்பட்ட வீக்கம் தானாகக் குணமாகிவிடும் என்று தேரையர் தனது நூலில் கூறியுள்ளார்.

**நந்தியாவட்டைப் பூ**

இதன் தாவரவியல் பெயர் **Tabernaemontana coronaria** என்பதாகும். கபிலர் இதனை நந்தி என்று குறிப்பிட்டுள்ளார். கண்பார்வைக் கோளாறுக்குத் திருமூலர் பல்வேறு காரணங்களைக் கூறுகிறார். கண்பார்வைத் தெளிவாகத் தெரிவதற்கு இந்துப்பு திப்பிலி பீதரோகிணி ஆகியவற்றை நந்தியாவட்டைப் பூச்சாற்றில் அரைத்துக் கண்ணில் ஊற்றி வர கண்பார்வைத் தெளிவடையும் எனத் 'திருமூலர் வைத்தியசாரம் 600' என்னும் நூலில் திருமூலர் கூறியுள்ளார். இதனை

**"இந்துப்பு திப்பிலி இயல்பீத ரோகிணி**
**நந்திப்பூச் சாற்றில் நயந்து அரைத்திட**
**அந்தகன் கண்ணுக் கருந்ததி தோன்றிடும்**
**நந்திக்கு நாதன் நயந்து உரைத்ததே" (திருமூலர் வைத்தியசாரம் 600)**

என்ற செய்யுட் பாடல் புலப்படுத்துகிறது.

**வெட்சிப் பூ**

இதன் தாவரவியல் பெயர் **Ixora coccinea** என்று பெயர். இது கூட்டு மஞ்சரியாக இருக்கும். கபிலர் இதனை வெட்சிப்பூ என்று கூறுகிறார். வெட்சிப்பூவைப் பொடியாகச் செய்து ஒரு சட்டியில் போட்டு வறுத்து அதனுடன் பசுவின் நெய் சேர்த்து எரிக்கவேண்டும். அதன் பிறகு அதனை

உருண்டையாகப் பிடித்து காலை, மாலை இரண்டு உருண்டைகள் வீதம் உண்டு வந்தால் இரத்த மூலம் உள்மூலம் வெளிமூலம் முளை மூலம் போன்றவை குணமாகிவிடும் என்கிறார் தேரையர். இதனை

**"போச்சடா அவ்விருட்சி வெளியில் வாங்கி**
**பொடியாகச் செய்தொரு சட்டியிலே**
**பாச்சடா பலகாயம் பசுவின் நெய்தான்**
**பக்குவமாய் விட்டெரித்துப் புரட்டிக் கொண்டு**
**மூச்சடா அறை நாலைந் துண்டை செய்து**
**முனைந்தந்தி சந்தியீரண் டுண்டை கொள்ளு**
**மாச்சடா ரெத்தஞ்சீழ் வெளியுள்மூலம்**
**மகத்தான முளைமூலம் வாங்கக் கேள்" (தேரையர்)**

என்ற செய்யுள் பாடல் தெளிவாக்குகின்றது.

**மலர்ப்படுக்கை (மல்லிகை முல்லை)**

முல்லைப்பூவின் தாவரவியல் பெயர் **Jasmine sambac** என்பதாகும். இவ்வகையில் பல அடுக்குடன் கூடிய பூக்களும் உண்டு. இதுவும் மருத்துவக் குணம் நிறைந்தது ஆகும்.

**"தீபாக் கினிதழையுந் தின்றமருந் தாலெழுந்த**
**தாபாக் கினியுந் தணியுங்காண் - யாபார**
**நட்பு வரும் விந்தூறும் நாளுமுட லஞ்செழிக்கும்**
**புட்பவணைக் கென்றே புகல்" (தேரையர்)**

மல்லிகை முல்லை மலர்களால் படுக்கை செய்து அதன் மீது படுத்துத் தூங்கினால் தீராத பசி நோய் நீங்கும். அது மட்டுமல்லாமல் சுக்கில விருத்தியும் அடையும். மேலும் உடலானது செழிப்புடன் திகழும் என்று தேரையர் முல்லை, மல்லிகைப் பூக்களின் மகத்துவத்தை விளக்குகிறார்.

**ஓரிலைத்தாமரைப் பூ**

இதனைக் கபிலர் அனிச்சம் என்று கூறுகிறார். இதன் தாவரவியல் பெயர் 'Anagallisarvensis Linn' என்பதாகும்.

**"ஏமமாம் ஓரிலைத்தா மரைச்சமூலம்**
**இடித்துமே சூரணித்து வெருகடி நெய்யில் கொள்ளச்**
**சோமமாய் உடம்பில் நின்ற வேகமெல்லாம்**
**சிதைந்துமே விட்டுப்போம் சிறுநீரில்தானும்**
**காமமாய் குளிர்ந்துவிடும் கண்புகைச்சல்**
**காமாலை வறட்சியொடு கடியபித்தம்**
**வாமமாய் போய்விடு மண்டலந்தான் கொள்ளு**
**மகத்தான ரோகம்மாறி காயசித்தியாமே" (போகர் 7000)**

ஓரிலைத் தாமரை சமூலத்தை (சமூலம் என்பது ஒரு தாவரத்தின் வேர் தண்டு இலை காய் விதை ஆகிய அனைத்தும் அடங்கும்) எடுத்து நன்கு காய வைத்து இடித்து சூரணம் செய்து கொள்ள வேண்டும். பின்னர் வெருகடி அளவு எடுத்து (வெருகு என்பது காட்டுப் பூனை. அதன் பாதம் பதியும் அளவு வெருகடி அளவு எனப்படும்.) நெய்யில் குழைத்து ஒரு மண்டலம் தொடர்ந்து உண்டால் கொடிய நோய்கள் பித்தம் வறட்சி காமாலை கண் புகைச்சல் அனைத்தும் நீங்கிவிடும். மேலும் நமது உடம்பில் இருக்கும் தீயவை

எல்லாம் சிதைவடைந்து சிறுநீருடன் வெளியேறிவிடுமாம். அத்துடன் காயசித்தியும் கைகூடும் என்கிறார் போகர்.

**புன்னை மரப்பூ**

இதனை கபிலர் புன்னாகம் என்று குறிப்பிடுகிறார். இதன் தாவரவியல் பெயர் **Celophyllum Apetalum** என்பதாகும். புன்னைமர இலை பூ விதை பட்டை பிசின் அனைத்தும் மருத்துவ குணம் உடையவையாகும். இப்பூவைத் தண்ணீரில் ஊறப்போட்டு அந்நீரைக் கொண்டு கண்களைக் கழுவி வர கண்வீக்கம் சொறி சிரங்கு முதலிய நோய்கள் தீரும். பூவை உலர்த்திப் பொடித்து தேனுடன் கூட்டி முப்பிணிக்கும் (வாதம் பித்தம் கபம்) கொடுக்கலாம் என்றும் இது சிறிது மயக்கத்தைக் கொடுக்கும் என்றும் இதன் மருத்துவக் குணத்தினை

**“புன்னைப்பூ பித்தமென்பர் போrhராடு வன்மேகம்**
**வின்னப் படர்சித்த விப்பிரமம் - பின்னுங்**
**கரப்பான் சொறிசிரங்குங் காணாதகற்றம்**
**உரப்பாம் மயக்கமுண்டாக் கும்” (அகத்தியர் குணபாடம்)**

என்ற வெண்பா பாடல் மூலம் அகத்தியர் உணர்த்துகிறார்.

**தும்பைப்பூ**

தும்பைப்பூவைக் கபிலரும் தும்பைப்பூ என்றே குறிப்பிட்டுள்ளார். இதன் இலை பூ அனைத்தும் மருத்துவக் குணம் கொண்டவையாகும். இதன் தாவரவியல் பெயர் **Leucus Aspara** என்பதாகும். பாம்புக் கடித்த நஞ்சாலுண்டான மூர்ச்சையினின்று உணர்ச்சி பெற தும்பைப்பூச் சாற்றை மூக்கில் பிழிந்து விட்டுவிட்டு, இதன் இலையையும் உள்ளுக்குக் கொடுத்து விட்டு, இதன் சாற்றைப் பாம்பு கடித்த கடிவாயிலும் விட நஞ்சு நீங்கும். மேலும் தீராத தலைவலிக்கு இந்தப் பூவின் சாற்றை இரண்டு துளி மூக்கில் விட குணமாகிவிடும். இப்பூவை எண்ணெயிலிட்டுக் காய்ச்சித் தலை முழுகிவர தலைபாரம், ஒற்றைத் தலைவலி நீரேற்றம் மூக்கடைப்பு போன்றவை குணமாகும். இதன் மருத்துவக் குணத்தை உணர்ந்த தேரையர்

**“தாகங் கடிதொழியுஞ் சந்நிபா தங்களறும்**
**அகந் தனில்விழிநோய் அண்டுமோ – மாகந்த**
**வம்பைப்பீ றங்குயத்து மாதேநின் செங்கரத்தால்**
**தும்பைப்பூத் தன்னைத் தொடு” (தேரையர் வெண்பா)**

என்ற வெண்பா பாடல் வழி எடுத்துரைக்கிறார். இதே கருத்தை அகத்தியரும் தனது அகத்தியர் குணபாடம் என்ற நூலில் கூறியுள்ளார்.

**குவளைப்பூ**

குவளைப்பூவிற்கு செங்கழுநீர் என்ற மற்றொரு பெயருமுண்டு. இதன் தாவரவியல் பெயர் Pontederia **Vagindis** என்பதாகும். இது நீர்நிலையில் வளரும் தாவர இனமாகும். இப்பூவைக் குளிர்ந்த நீரில் ஊறவைத்து முப்பது நாழிகை சென்ற பின் அந்நீரை அருந்த தீராதத் தாகநோய் நீங்கும். இப்பூவானது மேகத்தினால் ஏற்படும் உடற்சூட்டைத் தணிவித்து உயிர்நிலையைக் காத்து இன்பமளிக்கும் தன்மையினைக் கொண்டது. இதன் மருத்துவக் குணத்தை

**“கல்லெனும்பா ஷாணத்தைக் கட்டுவிக்கு மேகத்தைக்**
**கொல்லு முடலைக் குளிர்விக்கும் - உல்லாசம்**

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

**ஆக்கு முயிர் நிலையை யாதரிக்கு மெஞ்ஞான்றும்**
**மாக்கலவ மூலிமகி மை" (தேரையர் வெண்பா)**

என்ற வெண்பா பாடல் மூலம் தேரையர் உணர்த்துகிறார்.

**தொகுப்புரை**

பாரத தேசத்தில் எண்ணற்ற மலர்களை இயற்கை அன்னை நமக்குக் கொடையாக அளித்துள்ளாள். ஒவ்வொரு மலருக்கும் ஒவ்வொரு மணம் இருப்பதைப் போன்று ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குணம் உண்டு. இம்மலர்களின் பெருமையினை நன்கு உணர்ந்த நமது மண்ணில் வாழ்ந்து மறைந்த சித்தர்கள் அவற்றைக் கொண்டு எளிய மருத்துவ முறைகளைக் கையாண்டு நோயில்லாமல் பெருவாழ்வு வாழ்ந்தும் அம்முறையைச் சாதாரண மக்களுக்கு எடுத்தியம்பியும் அவர்களும் நோயில்லாப் பெருவாழ்வு வாழத் தலைப்பட்டுள்ளனர். தாம் அனுபவத்தால் கண்ட மருத்துவ முறையை ஓலைச் சுவடிகளிலும் கற்பாறைகளிலும் எழுதிப் பாதுகாத்து வந்துள்ளனர். அம் மருத்துவ முறையினையே தற்கால சித்த மருத்துவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் நாம் மேலை நாட்டு உணவு முறையினையும் பழக்க வழக்கங்களையும் மேற்கொண்டு விட்டு நம் பாரம்பரிய மருத்துவ முறைகளையும் பாரம்பரிய பழக்கவழக்கங்களையும் புறந்தள்ளிவிட்டோம். அதனால் பிறந்த குழந்தைகள் தொடங்கி முதியவர்கள் வரை அனைவருமே பல்வேறு நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளோம். இந்நிலை மாறவேண்டுமெனில் இயற்கை நமக்கு வரப்பிரசாதமாக வழங்கியுள்ள தாவரங்களின் பெருமையினை உணர்ந்து மேலை நாட்டு மருத்துவ முறைகளைப் போல எதிர்விளைவு இல்லாத மருத்துவ முறையினைப் பின்பற்றி ஆரோக்கியமான வாழ்கையை வாழ்வதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நோயில்லா வாழ்விற்கு நம் இயற்கையே மிகவும் துணை நிற்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

**பார்வை நூல்கள்**

[1] *குறிஞ்சிப்பாட்டு*. கழக வெளியீடு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.

[2] ஆ.பசுமலையரசு. *செந்தமிழும் சித்த மருத்துவமும்*. காவ்யா பதிப்பகம்.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது